DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.621/2024**

**P.W.1**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | அன்வேஷ் |
| Father Name | : | சிம்மாச்சலம் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.09.2025.
( 1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். )

<u>**அரசு தரப்பில் முதல் விசாரணை :**</u>

நான் தற்போது ஆந்திரா மாநிலத்தில் செக்காக்குளம் ஊரில் வசித்து வருகிறேன். எனக்கு ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகளை தெரியும். 2022 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் மாலை சுமார் 6 மணியிலிருந்து 8 மணிக்குள் பாண்டிக்கோவிலுக்கு அருகில் நான் HCL நிறுவனத்தில் வேலை முடித்துவிட்டு என்னுடைய நண்பர்களான முகமது சஜாத் மற்றும் ஜீவன்குமார் ஆகியோர்களுடன் வரும் போது ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகளில் ஒருவர் அவர் கையில் அணிந்திருந்த கடினமான காப்பு போன்ற வளையத்தை பயன்படுத்தி எனது இடது கண் பகுதியில் கையால் குத்தி, என்னிடமிருந்த HP லேப்டாப், IQOO நியோ 6 மொபைல், அதன் சார்ஜர் மற்றும் நான் அணிந்திருந்த சட்டையை கழற்றி தருமாறு மிரட்டி கேட்டு என்னிடமிருந்து பறித்துக்கொண்டார்கள். நான் தாக்கப்பட்டதால் கீழே விழுந்துவிட்டேன். என்னுடைய நண்பர்கள் முகமது சஜாத் மற்றும் ஜீவன்குமார் ஆகியோர்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து வரவழைத்து என்னை மதுரை அரசு ராசாசி மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார்கள். அங்கு போலிசார் வந்தார்கள். அங்கிருந்த ஒரு நபரிடம் நான் ஆங்கிலத்தில் சொன்ன விவரங்களை தமிழில் மொழிபெயர்த்து புகாராக எழுதிக்கொண்டார். என்னிடம்

காட்டப்படுவது அந்த புகார் தான், அந்த புகாரில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையது தான், அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

எதிரிகள் தரப்பில் பிரதிநிதித்துவ வழக்கறிஞர் (Representing Counsel) மட்டும் ஆஜரானார், ஆனால் குறுக்கு விசாரணைக்கு தயாராக இல்லை.

**மறு விசாரணை –** இல்லை.